**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, TIRUMANGALAM**
**Case No:STC.567/2022**
**DW : 1**

| | | | |
|---|---|---|---|
| Name | : நாசினிபேகம் | Caste | : |
| Father 's Name / Husband Name | : இளங்கோவன் | Calling | : |
| Village | : | Religion | : |
| Taluk | : | Age | : |

(புகார்தாரர் மற்றும் எதிரி ஆஜர். புகார்தாரர் மற்றும் எதிரி தரப்பில் வழக்கறிஞர் ஆஜர்.)
**(04.03.2026)**
**முதல் விசாரணை**

சாட்சிக்கு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு சாட்சியம் சொல்ல அனுமதிக்கப்படுகிறார்.

நான் தற்போது திருமங்கலத்தில் குடியிருந்து வருகிறேன். நான் ஆசிரியராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 2010ம் வருடம் முதல் புதுக்கோட்டை மாவட்டம் அறந்தாங்கியில் ஆசிரியராக பணியாற்றி வருகிறேன். எனது கணவரும் குழந்தைகளும் மதுரை திருமங்கலத்தில் இருந்து வந்தார்கள். எனது கணவரிடம் அவசரத்தேவைகளுக்காக எனது காசோலைகளை கொடுத்து வைத்திருந்தேன். அதில் ஒரு காசோலையில் மட்டும் எனது கணவர் பணம் எடுப்பதற்கு வசதியாக கையெழுத்து போட்டுக் கொடுத்திருந்தேன். 2019ம் வருடம் பிப்ரவரி மாதம் திருமங்கலம் காங்கிரஸ் கட்சி அலுவலகத்தில் எனது கணவரிடம் இருந்த 10 காசோலைகள் (அதில் நான் கையெழுத்துஇட்டு கொடுத்த ஒரு காசோலையும் அடங்கும்), தொலைந்துவிட்டதாக என்னிடம் சொன்னார். அதனால் நான் மேற்படி காசோலைகள் தொலைந்துவிட்டது குறித்து ஆக்ஸிஸ் வங்கி கிளையில் நான் எழுத்துபூர்வமாக தகவல் சொன்னேன். வங்கியில் இருந்து 05.03.2019ம் தேதி எனது தொலைந்து போன காசோலைகளுக்கு ஸ்டாப் பேமண்ட்

கொடுத்துவிட்டார்கள். 04.12.2018ம் தேதியிட்ட வங்கியில் கொடுத்த வேண்டுகோள் கடிதமும் அதற்கு வங்கியில் இருந்து கொடுக்கபட்ட கணினி நகல் கடிதம் எ.த.சா.ஆ.1 ஆகும் (புகார்தாரர் வழக்கறிஞர் அதன் செல்லும் தன்மைகுறித்தும் ஏற்றுக்கொள்ளும் தன்மைகுறித்தும் ஆட்சேபனை தெரிவித்ததால் ஆட்சேபனையுடன் குறியீடு செய்யப்படுகிறது. அதன் செல்லும் தன்மை குறித்து பின்னர் முடிவெடுக்கப்படும்). அதன் பிறகு புகார்தாரர் தொலைந்து போன எனது கையெழுத்திட்ட ஒரு காசோலையை வைத்து என் மீது வழக்கு தொடுத்துள்ளார். எனது கணவரும் புகார்தாரரும் நெருங்கிய நண்பர்கள். கட்சி அலுவலகத்தில் இரண்டுபேரும் ஒன்றாக இருப்பார்கள். அவர்களுக்குள் ஏற்பட்ட கருத்து வேறுபாட்டால் பிரிந்து விட்டார்கள். இதன் காரணமாக இந்த வழக்கை புகார்தாரர் என் மீது தாக்கல் செய்துள்ளார். எனக்கும் புகார்தாரருக்கும் எவ்வித கொடுக்கல் வாங்கல் கிடையாது.

புகார்தாரர் தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கு இனங்க குறுக்கு விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது.